S.M. Fernando
OPTICIANS
SIGHT TESTED PRESCRIPTIONS ACCURATELY DISPENSED
580, HOSPITAL ROAD, (Near Bank of Ceylon) JAFFNA.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும் கண்ணாடிகளை சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி, (இலங்கை வங்கிக்கு அருகில்) யாழ்ப்பாணம்.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 27 புதன்கிழமை (10-03-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 103

# சங்குப்பிட்டி ஊடாக உணவுப் பொருள்கள்; அனுமதிக்க விடுதலைப் புலிகள் இணக்கம்

## படகு உரிமையாளர் கவனத்துக்கு!

இளாலி - பூநகரி படகுச் சேவையில் ஈடுபட்டுள்ள உரிமையாளர்கள் அனைவரையும் நாளை பிற்பகல் 2 மணிக்கு இளாலிப் படகுத் துறைக்கு வருமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட நீதித்துறையின் வருவாய்ப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (உ)

## ஐ.நா.வின் கண்காணிப்பில் வாகன அணி
### பயணிகள் அனுமதி குறித்து அடுத்த கட்டப் பேச்சு

யாழ்ப்பாணம். மார்ச் 10

அகதிகளுக்கான ஐ.நா தூதரகத்தின் கண்காணிப்பின் கீழ், சங்குப்பிட்டி — கேரதீவு பாதையூடாக உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிவரும் வாகனங்களை, போக்குவரத்துக்கு அனுமதிக்க விடுதலைப் புலிகள் இயக்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஐ. நா. அகதிகள் தூதரகம் ஸ்ரீலங்கா அரசுடனும், இராணுவ தலைமைப் பீடத்துடனும் பேச்சுக்களை நடத்தவிருக்கிறது.

அரச தரப்பு இந்தத் திட்டத்துக்கு இணங்கும் பட்சத்தில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வரும் தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வாகனங்கள் பூநகரிப் பாதை ஊடாக போக்குவரத்தை மேற்கொள்ளும்.

இந்த வாகனப் போக்குவரத்து ஐ. நா. அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் இடம் பெறும்.

ஐ. நா. அகதிகள் தூதரக அதிகாரி டாக்டர் பீற்றர் நிக்கலஸ்சுக்கும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்குமிடையில் நேற்று இரண்டாவது தடவையாக பேச்சுக்கள் இடம் பெற்றன.

இப்பேச்சுக்களின் போது புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்துகொண்டனர்

இப் பேச்சுக்களின்போது சங்குப்பிட்டி — கேரதீவு பாதைத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 220 தபால் பொதிகளும் நேற்று இறக்கப்பட்டன

யாழ்ப்பாணம், மார்ச் 10

''குமண'' கப்பலில் எடுத்து வரப்பட்ட 220 தபால் பொதிகளும் நேற்று பருத்தித்துறை இறங்குதுறையில் இறக்கப்பட்டன.

யாழ் தபாலக ஊழியர்கள் தபால் பொதிகளைப் பொறுப்பேற்றனர்.

தபால்கள் இன்றுமுதல் தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தபால் பொதிகளில் கணிசமான அளவு வெளிநாட்டுக் கடிதங்களும் வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-17-87-162-109)

### ஒரே சமயத்தில்
## நேற்று 3 கப்பல்களிலிருந்து பொருள்கள் இறக்கப்பட்டன

யாழ்ப்பாணம். மார்ச் 10

மூன்று கப்பல்களில் இருந்து பொருள்கள் நேற்று ஒரே சமயத்தில் பருத்தித்துறை இறங்குதுறையில் இறக்கப்பட்டன.

குமாரி கப்பலில் இருந்த எஞ்சிய மா மூடைகள் நேற்று இறக்கப்பட்டதும் அக்கப்பல் நேற்று நண்பகலே கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

இக்கப்பலில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியூர்களுக்கு அனுப்பப்படும் 60 தபால் பொதிகளும் எடுத்துச் செல்லப்படுகின்றன.

இதேசமயம்—

3 ஆயிரத்து 73 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள், தபால் பொதிகள், யாழ். செயலகத்திற்கான ம. எண்ணெய், டீஸல் ஆகியவற்றை ஏற்றி வந்த 'குமண' கப்பலிலிருந்து பொருள்களை இறக்கும் வேலையும் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

'நில்கிரி' கப்பலில் வந்த மண்எண்ணெய் பரல்களில் ஒரு தொகுதியும் நேற்று கடலில் இறக்கப்பட்டு, படகுகள் மூலம் பருத்தித்துறை இறங்கு துறைக்கு இழுத்து வரப்பட்டன.

(உ-3-17-87-109-162)

### பூநகரியிலிருந்து
## 'சங்குப்பிட்டி வரை படை முன்னேறித் திரும்பியது

பூநகரி முகாமிலிருந்த இராணுவத்தினர் நேற்றுக் காலை 6-30 மணியளவில் முன்னேறி சங்குப்பிட்டியை வந்தடைந்தனர்.

இவர்களுக்குப் பாதுகாப்பாக நான்கு விசைப்படகுகளும் ஒரு ஹெலிக்கொப்டரும் அப்பகுதியில் — கடல் நீரேரிப்பகுதியில் — வட்டமிட்ட வண்ணம் இருந்தன.

முன்னேறிய இராணுவத்தினர் தாக்குதல் ஏதும் நடத்தாமல் முற்பகல் 11-30 மணியளவில் பூநகரி முகாமுக்குத் திரும்பினர். [உ]

## எதிர்க்கட்சிகள் இணைந்து பொதுமக்கள் முன்னணி
### ஈ பி.ஆர்.எல்.எவ்வும் சேரும்?

கொழும்பு, மார்ச் 10

ஸ்ரீ'ல.சு.க. உட்பட ஐந்து பிரதான எதிர்கட்சிகள் இணைந்து ''பொது மக்கள் ஐக்கிய முன்னணி'' என்ற புதிய அமைப்பை உருவாக்கியிருக்கின்றன.

இந்த அமைப்பை ஒரு கட்சியாகப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் நேற்று நண்பகல் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வாவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எவ் உட்பட மேலும் பல எதிர்க்கட்சிகள் இந்தக் கூட்டமைப்பில் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித்திருப்பதாக முன்னணியுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

## செட்டிகுளம் நடவடிக்கையில் ஆயிரத்து ஐநூறு படையினர்

கொழும்பு, மார்ச் 10

செட்டிகுளத்தில் படையினர் மேற்கொண்டு வரும் ''சத பஹர'' இராணுவ நடவடிக்கைகளில் ஆயிரத்து ஐநூறு துருப்புகள் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

செட்டிகுளம் முகாமிலிருந்து படையினர் சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் தூரம் முன்னேறியதாகவும்—

அப்பகுதியில் பெரும் மோதல் சம்பவங்கள் ஏதும் இடம்பெறவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-எ-6)

## புலமைப் பரிசில் பரீட்சை: வெள்ளிக்கு முன் முடிவு

யாழ்ப்பாணம், மார்ச் 10

1991 ஆம் ஆண்டு நடந்த விசேட 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் நாளை மறுதினத்துக்குள் வெளியிடப்படும் என்று கல்வி அலுவலக வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

இப்பரீட்சையின் முழு முடி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்,முஸ்லிம் எம்.பிக்களுக்கு அரசு கூடுதல் பாதுகாப்பு
### கொழும்பில் புலிகளின் விரைவுத் தாக்குதல் பிரிவாம்

கொழும்பு, மார்ச் 10

எதிர் கட்சிகளில் உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் எம். பிக்களுக்கு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பை அதிகாரிகள் பலப்படுத்தி உள்ளனர்.

விடுதலைப்புலிகளின் விரைவு தாக்குதல் படை (Rapid ttack Force) யின் பிரிவு ஒன்று கொழும்புக்கு வந்துள்ளதாகவும் —

அதன் தாக்குதலில் இருந்து எதிர்க் கட்சிகளில் உள்ள தமிழ், முஸ்லிம் எம். பிக்களை பாதுகாக்க அவர்களுக்கு மேலதிகப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

ஈ. பி. டி. பி. அமைப்பின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவை ஒழித்து விடும்படி விடுதலைப் புலிகள் இயக்கம் தனது விரைவு தாக்குதல்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## கொடி தினம்

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் கைதடிச் சைவச் சிறுவர் இல்லக் கொடி தினம் இன்றாகும்.

அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், வங்கிகள், பொது இடங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் கொடி தினச் சீட்டுகள் விற்கப்படும் என்றும் அவற்றை வாங்கி ஆதரவு தருமாறும் இந்து சமயப் பேரவை குடாநாட்டு மக்களிடம் வேண்டு [illegible]

# 1,500 பரல் ம. எண்ணெய் நேற்று வந்து சேர்ந்தது
### உடனடியாகக் கப்பலிலிருந்து இறக்கம்

கொழும்பிலிருந்து 1,500 பரல் மண்எண்ணெயை ஏற்றிக் கொண்டு நில்கிரி கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறையை வந்தடைந்தது

கப்பலிலிருந்து மண்எண்ணெயை இறக்கும் வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டன.

கப்பலிலிருந்து மண் எண்ணெயை கடலில் இறக்கி, நாற்பது நாற்பது பரல்களாக அவற்றைச் சேர்த்துக் கட்டி படகுகள் மூலம் இறங்கு துறைக்கு இழுத்து வரும் நடவடிக்கை நேற்றே ஆரம்பிக்கப்பட்டது.

இறக்கப்படும் மண் எண்ணெயை லொறிகளில் ஏற்றி உடனடியாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பி வைக்கவும் —

ப. நோ. கூ. ச மூலம் குடும்ப அட்டைக்கு ஒரு லீற்றர் என்ற அடிப்படையில் மண்எண்ணெயை பொதுமக்களுக்கு விநியோகிக்க உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். [உ-3-5-87-162]

## 400 பரல் மண்எண்ணெய் 'வாதுவ' கப்பலில் வரும்

யாழ்ப்பாணம், மார்ச் 10

அடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் ''வாதுவ'' கப்பலில் 400 பரல் மண்எண்ணெய் எடுத்து வரப்படவிருப்பதாக கொழும்பில் இருந்து தகவல் கிடைத்திருக்கிறது

கொழும்பு துறைமுகத்தில் இக்கப்பலில் பொருள்கள் ஏற்றும் வேலைகள் துரிதமாக நடப்பதாகவும்—

ப. நோ. கூ. சங்கங்களுக்குரிய அத்தியாவசியப் பொருள்களும் தனியார் நிறுவனங்களுக்கான பொருள்களும் தற்சமயம் இக்கப்பலில் ஏற்றப்படுவதாகவும் —

பெரும்பாலும் இக்கப்பல் திங்கட்கிழமை கொழும்பில் இருந்து புறப்படும் என எதிர்பார்க்கப் படுவதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (உ-3)

# அ.தி.மு.க-காங்கிரஸ் கூட்டணி முறிந்தது!
### முதல்வர் ஜெயலலிதா நேற்றிரவு அறிவிப்பு

சென்னை, மார்ச் 10

அ. தி. மு. கவுக்கும் இந்திரா காங்கிரஸுக்கும் இடையிலான கூட்டணி முறிந்தது.

இந்திய நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சிக்கு அ. தி. மு. க. வழங்கி வந்த ஆதரவை விலக்கிக் கொள்வதாக தமிழக முதலமைச்சரும் அ. தி. மு. கவின் பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா நேற்று சென்னையில் அறிவித்தார்.

இந்த அறிவிப்பின் மூலம் இரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டணி முறிவடைந்து விட்டது என்பதை ஜெயலலிதா உத்தியோக பூர்வமாக வெளியிட்டிருக்கிறார் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

இரு கட்சிகளுக்கும் இடையிலான உறவு கடந்த சில மாதங்களாகச் சீர் கெட்டு வந்தது தெரிந்ததே.

இந்தியாவில் ஆட்சி அமைத்திருக்கும் பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் சிறுபான்மை அரசுக்கு, வழங்கி வந்த ஆத

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் திங்களன்று விமானக் குண்டு வீச்சு!

நேற்று முன்தினம் திங்கட்கிழமை — மகளிர் தினத்தன்று — மன்னாரில் பரவலாக விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

காலை 9.10 மணியளவில் மன்னார் பெரியபண்டிவிரிச்சானில் மூன்று பொம்மர்களும் ஒரு ஹெலியும் மக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கித் தாக்குதல்களை நடத்தின.

மூன்று தடவைகள் மொத்தம் ஆறு குண்டுகள் வீசப்பட்டன. தொடர்ந்து ஹெலி ஒன்று சுமார் முப்பது நிமிட நேரம் அப்பகுதியில் வேட்டுக்களைத் தீர்த்தது

இந்தத் தாக்குதல்களில் நான்கு கட்டடங்கள் சேதமுற்றன.

தொடர்ந்து கட்டையடம்பன், மடு றோட் ஆகிய பகுதிகளில் பொம்மர்கள் எட்டுக் குண்டுகளை வீசின. ஹெலித் தாக்குதலும் இடம்பெற்றது.

ஆனால் பெரும் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

மீண்டும் முற்பகல் 11 30 மணியளவில் பெரிய பண்டிவிரிச்சானில் —முதலில் தாக்குதலுக்கு இலக்கான பகுதிகளுக்கு அருகில்—பொம்மர்கள் நான்கு குண்டுகளை வீசின ஹெலி ஒன்று வேட்டுக்களைத் தீர்த்தது. இத் தாக்குதல்களினாலும் பெரும் சேதம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

உரும்பராய் தெற்கில் ஆறு (6) பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு திருமதி ச. புஷ்பராணி, வேம்பன் வீதி, உரும்பராய். (24794)

பாவித்த நல்ல நிலையில் உள்ள Australion டிராக்டர் கலப்பையும், மண்ணெண்ணெய்க்கு மாற்றப்படாத புதிய C.D Honda-90 மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: அன்ரன், ஆஸ்பத்திரியடி, மிருசுவில். (6043)

### கொடுப்பனவு படிவங்கள்

ஆசிரியர்களுக்குரிய ஊக்குவிப்புக் கொடுப்பனவுக்கான 11-06-90 முதல் 31 - 12 - 90 வரையில் உள்ள காலப்பகுதிக்குரிய வரவுச் சான்றிதழ்களைத் தயாரிக்கும் படிவங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சோதி புத்தகசாலை, பஸ் நிலையம், சாவகச்சேரி. (சி-4659)

### சனி மாற்றம்

இலங்கை, இந்திய புத்தகங்கள், சஞ்சிகைகள், பாடசாலை உபகரணங்கள், பிறந்த தின, திருமண வாழ்த்து மடல்களுடன் சத்யாவின் சனி மாற்றமும் (ரூ 8-50) விற்பனையாகின்றன. அனந்தீஸ் புத்தக நிலையம், 21/B, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (5811)

### இலவச திருமண சேவை

32 வயது, ரோகிணி, செவ்வாய் 7, இரகபாவம் 64 ஆசிரியைக்கு ஏற்ற அரச கூட்டுஸ்தாபன மணமகன் தேவை. பொதுமக்கள் தொடர்பு: ஞாயிறு காலை. து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (24797)

3் வயது, அத்தம், B.Sc., சைவ ஆசிரியருக்கு மணமகள் தேவை. 30 வயது சகோதரிக்கு மாற்றுச் சம்பந்தமும் ஏற்கப்படும். பொதுமக்கள் தொடர்பு: ஞாயிறு காலை. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (24793)

**SPOKEN ENGLISH With GRAMMAR**

திரு. M.A ஹரி

திங்கள் } 2 00
புதன் }

ஆரம்பம்:
10 — 03 — 93

BOND INSTITUTES
யாழ்ப்பாணம்
(சி 4661)

## வாழ்த்துகிறோம்

யாழ். தாவடி
இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

இன்று (10 - 03 - 1993) பிற்பகல் 3-00மணிக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவுடன் நடத்தவிருக்கும்

★ பரிசளிப்பு விழா (1992) ★

சிறப்புடன் நிகழ வேதவிநாயகர் திருவருளை வேண்டி வாழ்த்துகிறோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா. தா இ. த. க பாடசாலை.

09 - 03 - 1993 (24798)

ஆசிரியர்/அரசாங்க ஊழியர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு வரவுச் சான்றிதழ் படிவம் இன்றுமுதல் விற்பனைக்கு வரும்.

பாரதி பதிப்பகம்,
A. B. PRINTERS,
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

குமார் அச்சகம்,
பருத்தித்துறை.

(சி 4666)

# சிறிமாவோவின் தலைமையில் வத்தளையில் மகளிர் கூட்டம்

கொழும்பு மார்ச் 10

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி நேற்று முன்தினம் கொழும்பு வத்தளை நகரசபைக் கட்டடத்தில் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அங்கு பல்வேறு துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் லங்கா சமசமாஜக் கட்சிப் பிரமுகரான திருமதி விவியன் குணவர்த்தனா உட்பட பலர் உரையாற்றினர்.

பெண்களுக்கு எதிரான அரசின் செயல் திட்டங்களை அவர்கள் கடுமையாக விமரி

(4ஆம் பக்கம் பார்க்க)

## Y. M. C. A. கோப்பாய்
## அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் சங்க யாப்பு விதிகளுக்கமைய 21-11-1992 கூட்டப்பட்டு புதிய பணிப்பாளர் சபை தெரிவு செய்யப்பட்டது. இச்சங்கத்துடன் தொடர்பு கொள்ளும் எவரும் இப்புதிய பணிப்பாளர் சபையின் செயலாளர் அல்லது தலைவருடன் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும். பழைய பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுடனோ அல்லது வேறெந்த முகவரியிலோ தொடர்பு கொள்ளப்படும் விடயங்களுக்கு புதிய பணிப்பாளர் சபை பொறுப்பேற்கமாட்டாது என்பதை தயவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

Y. M. C. A
JASMINE COTTAGE,
KOPAY CENTRE, KOPAY.

திரு. E D. நவரத்தினம், செயலாளர்.
திரு. C. C. அருமைநாயகம், தலைவர்.

(24799)

## 18ஆம் மாத நினைவஞ்சலி



**துரைச்சாமி ஞானசக்தி**

தோற்றம்: 09 — 09 — 1967
மறைவு: 19 — 09 — 1991

கனவுகள் கண்ணீரில் கரைகின்றன, பதினெட்டு மாதங்கள் ஓடியும் எம் மனம் அலைபோல் வேகுது. மாயை செய்த கோலத்தால் எம் கண்கள் ஒளியின்றித் தவிக்குது, பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து இறைவனடி மலர்ந்த எமது அன்பு சத்தியா உங்கள் ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அம்மா, அண்ணாமார்,
தங்கைமார், அக்கா,
அத்தான், மக்கள்,
உற்றார், உறவினர்கள்.

## ஓராண்டு நினைவஞ்சலி



**அமரர் சு. துரைச்சாமி**
(தும்பளை)

தோற்றம்: 25 — 07 — 1926
மறைவு: 20 — 02 — 1992

அன்புக்கும், பாசத்திற்கும் உரிய அன்பு ஐயா! ஆண்டு ஒன்று சென்றாலும்! உங்கள் பிரிவால் ஆறாத்துயரில் வாடுகிறோம்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள்,
மருமகன்,
உற்றார் உறவினர்கள்.

நாகபூஷணி அம்மன்-
கோவிலடி வீதி,
கோண்டாவில். (24789)

## சிறுவர் இல்லத்துக்கு வாரி வழங்குக!

இன்று 10 - 03 - 1993இல் நடைபெறும் கைதடி சிறுவர் இல்லம் கொடிதினத்தை முன்னிட்டு அனைவரையும் வாரி வழங்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை.
கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை,
கோண்டாவில் கிழக்கு சனசமூக நிலையமும் இந்து இளைஞர் மன்றமும்.

(24785)

## மொடேர்ண் எடியுக்கேஷன் சென்ரர்

நெல்லியடி

**G.C.E. O/L DAY CLASS**

ஆரம்பம்: 16 - 03 - 1993

| | | |
|---|---|---|
| ஆங்கிலம்: | காலை | 8-00 — 9-00 |
| தமிழ்: | காலை | 9-00 — 10-00 |
| கணிதம்: | காலை | 10-00 — 11 00 |

நிர்வாகி.

(24788)

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 24 — 10 1918



மறைவு: 10 - 03 1982

**வல்வை பொன்னுத்துரை**
இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்

பாசத்தின் பிறப்பிடமே!
பண்பின் உறைவிடமே!
உங்கள் பிரிவுத்துயர் எமைத் தாக்கும் போது கூட இருந்து ஆறுதல் தாருங்கள்

ஆன்ம சாந்தி வேண்டும்:
மனைவி மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வசந்த கிரி
மயிலிட்டி ... க்கு
மயிலிட்டி.

24786

தமிழ் ஈழத்தில்....
**தரமான மென்பான வகைகள்-தாகம் தணித்திட கேட்டு வாங்கிப் பருகுங்கள்**

# "புத்தூக்கி - REFRESHER"

**மென்பானங்கள்** [காற்றூட்டப்பட்டவை AERATED]

இன்று குடாநாட்டின் அனைத்து பகுதியிலும் அமோக விற்பனையில் திகழ்கின்றது

◎ கோப் கோலா ◎ ஒரேஞ் பார்லி ◎ கிறீம் சோடா ◎ நெக்ரோ
◎ லெமனட் ◎ இஞ்சி சோடா ◎ மென் சோடா

மற்றும் எமது தயாரிப்புக்கள்

★ "சொக்கா" சொக்லட் ★ ஸ்ரோ பெறி ஜாம்
★ வூட் அப்பிள் ஜாம் ★ பைன்அப்பிள் ஜாம் (அன்னாசி)
★ கூடல்மன்ஸ் (உடன் பழச் சாறு) ★ ஜப் - பிக்ஸ் கம் (பல்வேறு அளவுகளில்)

தயாரித்து வழங்குபவர்கள்:
யாழ் பகுதி தெங்கு - பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (மட்டு.)

## 'புத்தூக்கி' மென்பான வகைகள் விநியோகஸ்தர்கள்

யாழ்ப்பாணம் / நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு:
"இனிமை" மென்பான விநியோகஸ்தர், 54A, புங்கன் குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
தென்மராட்சிப் பகுதி: திரு. கு. தவராஜசிங்கம் "சுவையகம்" மென்பான விநியோகஸ்தர், பிரதான வீதி, சாவகச்சேரி.
வலி காமம் பகுதி: திரு. ஐ சிவநேசன் "துஷிக்கா" மென்பான விநியோகஸ்தர், கே. கே. எஸ் வீதி, இணுவில்.
வடமராட்சிப் பகுதி: திரு. ஐ சிவநேசன் "அபர்ணா" மென்பான விநியோகஸ்தர், கே. கே. எஸ். வீதி, இணுவில்.

குறிப்பு ⟶ 300 மி. லீற். கொக்காகோலா, பான்ரா, வெற்றுப்போத்தல், பெட்டி, 400 மி. லீற்றர் யானை சோடா வெற்றுப் போத்தல் பெட்டி நியாயமான விலைக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு கொள்ளவும்: க. ஜெயபாலன்,
பொது முகாமையாளர், யாழ் பகுதி தெ ப பொ. கூ. ச. கொத்தணி
370, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(24872)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மனம் உவந்து உதவுங்கள்

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தின் கொடி தினம் இன்றாகும். அந்த இல்லத்தில் வாழும் 42 சிறுவர்களின் உணவு, உடை, கல்வி மற்றும் தேவைகளுக்குரிய செலவினங்களுக்கான பணத்தை திரட்டுவதே இன்றைய கொடி தினத்தின் நோக்கமாகும்.

யுத்தத்தின் போது தமது பெற்றோர்களை இழந்து அநாதரவாகிவிட்ட இந்தச் சைவச் சிறுவர்களை வளர்த்துக் கல்வியறிவூட்டி சிறந்த எதிர்காலப் பிரசைகளாக்கி விடும் பொறுப்பு இந்து சமயப் பேரவையை மட்டும் சார்ந்ததல்ல தமிழ்ப் பிரதேசங்கள் எங்கும், குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் வதியும் சைவப் பெருமக்களின் தலையாய கடமையாகும்.

மக்கள் சேவையே மகேசன் சேவை என்பது சைவ சமயத்தின் முக்கிய கோட்பாடு. ஏழைகள், அநாதைகள், வசதி குறைந்தவர்கள், வயதானவர்கள் ஆகியோருக்குச் செய்யும் உதவியும், சேவையும் ஆண்டவனுக்குச் செய்யப்படும் அர்ச்சனையாகும். அவர்களிடமே இறைவன் குடிகொண்டிருக்கிறான் என்று விவேகானந்தர் போன்ற மகாஞானிகள் எல்லாம் கூறினார்கள். ஏழைகளுக்கு, அநாதைகளுக்கு இரங்கி அவர்களுக்கு உதவுவதும, ஆதரிப்பதும் ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவதற்குச் சமனாகும்.

தர்மம் தலைகாக்கும் என்பது முதுமொழி... அறஞ்செய விரும்பு என்றாள் ஒளவைப் பிராட்டி. ஒவ்வொருவரும் தமது உழைப்பில் ஒரு பகுதியைத் தானம் செய்வதற்கு ஒதுக்கவேண்டும் என்று நீதி நூல்கள் பகரும். ஒருவன் மனம் விரும்பிச் செய்யும் சிறிய நிதியுதவி பெரும் கொடையாகக் கருதப்படும்.

ஆகையால் குடாநாட்டு சைவப் பெருமக்கள் ஒவ்வொருவரும் இன்றைய கொடி தினத்தில் மனமுவந்து உதவ வேண்டும். நீங்கள் வழங்கும் சிறுதுளி பெரு வெள்ளமாகி ஆதரவற்ற அந்த நாற்பத்திரண்டு சிறுவர்களுக்கும் வாழ்வளிக்கும்.

இன்றைய போர்க்கால சூழ்நிலையில், ஏழைகளுக்கும, அநாதைகள், ஆதரவற்றோருக்கும் உதவுவதை தங்கள் பொறுப்புகளில் ஒன்றாக்கிக் கொள்ள வேண்டிய அவசியம் தமிழர்களுக்குத் தோன்றியுள்ளது. கிராமத்துக்குக் கிராமம், குறிச்சிக்குக் குறிச்சி அநாதரவானோர் எண்ணிக்கை பெருகி வருகிறது.

ஆகையால் சமய மன்றங்கள், சமூக நிறுவனங்கள் அவ்வப்பகுதியில் உள்ள பண வசதி படைத்தவர்கள், ஆலய நிர்வாகங்களின் உதவியுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வளிக்க முன்வர வேண்டும். எங்கள் சகோதரர்களையும், உறவினர்களையும் பராமரிக்கவும், கைகொடுக்கவும் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் உதவியையும் பெறலாம்

ஒரே அமைப்பு எண்ணிக்கை கூடிய ஏதிலிகளை வைத்துப் பராமரித்துப் பல கஷ்டங்களையும், சிக்கல்களையும் எதிர்நோக்குவதை விட, ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்த எண்ணிக்கையானோரை வைத்துப் பராமரிப்பது இலகுவானதாகும்.

ஆனால் ஒன்று, இத்தகைய மக்கள் சேவையில் தொண்டு உள்ளம் உடையவர்களே ஈடுபடுதல் அவசியம். மக்களின் தர்மப் பணத்தில் இயங்கும் நிறுவனங்களில் ஊழல், மோசடி, அதிகாரத்தனம் உடையவர்களுக்கு இடமளித்தல் ஆகாது. அப்போதுதான் அந்த நிறுவனங்களின் மனித நேயப் பணி — தெய்வீகப் பணி — உரியவாறு ஈடேற முடியும். அந்த நிறுவனங்களும் களங்கமின்றிச் செயற்பட்டு கீர்த்தி பெற முடியும். அவை கீர்த்தி பெற்றால் மட்டுமே ஆதரவற்றோர் அநாதைகள் எமது தாய்நாட்டின் பயனுள்ள பிரசைகளாக வாய்ப்பிருக்கும்.

## இன்று

யாழ். றோட்டறக்ட் கழகத்தினர் நடத்தும் பேராசிரியர் ஹூலர் ஜெயசிங்கம் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான 4ஆவது பொது அறிவுப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி - 1993 இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரியில் நடைபெறும்.

ஹாட்லிக் கல்லூரி அணிக்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணிக்கும் இடையில் இறுதிப்போட்டி நடைபெறும்.

(க)

o o o

சிவகப் பிரதேச செயலகங்கள் ஒன்றிணைந்து நடத்தும் கழகங்களுக்கு இடையே நடைபெறும் விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை காலை 10-00 மணிக்கு வேலணைப் பிரதேச செயலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

(ஓ)

o o o

யாழ்ப்பாணம், மார்ச் 10

சாளரம் வெளியீட்டாளர்கள் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தினரின் ஆதரவில் நடத்தும் இலக்கிய நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணியளவில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி அரங்கில் நடைபெறும்.

இந்நிகழ்வில் சிறுகதை எழுதுவது தொடர்பாக இளையவன் சிறப்புரையாற்றுவார்

[ச]

o o o

யாழ் பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் கருத்தரங்குத் தொடர் — 4 இன்று பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி அரங்கில் நடைபெறும். வைத்திய கலாநிதி சிர்மாறன் 'எய்ட்ஸ்' என்னும் தலைப்பில் கருத்துரை வழங்குவார்.

(த)

o o o

யாழ். மாவட்ட கணித விஞ்ஞான கலவன் நிலையத்தின் ஓராண்டு நினைவு விழாவை முன்னிட்டு கணித, விஞ்ஞானப் பொருள்களின் கண்காட்சி கோப்பாய் மகா வித்தியாலயத்தில் இன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

கண்காட்சி எதிர்வரும் 13ஆம் திகதி வரை நான்கு தினங்கள் — காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை நடைபெறும்.

(ஒ-109)

## இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட — பதிவு செய்யப்பட்ட—கழகங்களுக்கு இடையேயான உதைபந்தாட்ட போட்டித் தொடரில் இன்று யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ பிற்பகல் 3 மணிக்கு — சென் மேரிஸ் வி க அணி எதிர் கலைவாணி வி.க. அணி

★ மாலை 4 மணிக்கு சென். நிக்கிலஸ் வி. க. அணி எதிர் சென். றோக்ஸ் வி. க. அணி.

(உ-17)

## பாடசாலைகளில்

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு. வீ. கணேசராசா தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

[க-110]

★ ★ ★

யாழ். வண். நாவலர் மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 1-30மணிக்கு அதிபர் திரு ஐ துரைராஜா தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்

(ஓ)

★ ★ ★

யாழ். சென் றோக் றோ.க. வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் ஜே. யேசுதாஸன் தலைமையில் நடைபெறும்.

(ஒ-51)

# சமஷ்டி முறையிலான தீர்வு இல்லையேல்
# நாடு பல துண்டுகளாகப் பிளவுபடும்

## கொழும்புக் கருத்தரங்கில் உயங்கொட எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 10

சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களிடையே உள்ள சனநாயக சக்திகள், தற்போதுள்ள சூழ்நிலையைப் பயன்படுத்தி, சமஷ்டி அரசியலமைப்பின் அடிப்படையில், பேச்சுவார்த்தை மூலமான தீர்வு ஒன்றை இனப்பிரச்சினைக்குக் காண வேண்டும்.

அவ்வாறு தீர்வு காணத் தவறினால் இலங்கை எதிர்காலத்தில் இன அடிப்படையில் துண்டு துண்டுகளாக பிளவுபடுவதைத் தவிர்க்க முடியாமல் போகும். அப்போது கூட்டுசம்மேளன (கொன்பெடரேஷன்) முறை மூலம் கூட அரசியல், தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்க முடியாத நிலைமை ஏற்படும்.

இவ்வாறு எச்சரித்தார் கொழும்பு பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞான விரிவுரையாளர் ஜெயதேவ உயங்கொடை.

விஜயகுமாரணதுங்க ஞாபகார்த்த நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த ''இனப்பிரச்சினை தீர்வு எவ்விதம்?'' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே திரு ஜெயதேவ உயங்கொடை இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

கொழும்பு ஆனந்தா கல்லூரி மண்டபத்தில் கடந்த மாத இறுதியில் இக்கருத்தரங்கு திரு. திஸ்ஸ அபய சேகரா தலைமையில் நடைபெற்றது.

திரு. ஜெயதேவ உயங்கொடை தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

### சாதகமான அபிப்பிராயம்

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென்பதற்குச் சாதகமான அபிப்பிராயங்களே இப்போது மேலோங்கி வருகின்றன. சிங்கள சமூகத்தின் மத்தியில் உள்ள தீவிர தேசியவாத யுத்த ஆதரவாளர்கள் பின்தள்ளப்பட்டு வருகின்றனர்

அரசியல் தீர்வு அவசியமா? இல்லையா? என்பது அரசியல் அரங்கில் இன்று ஒரு முக்கிய பிரச்சினையாக இல்லை. பதிலாக தீர்வுக்கான திட்டம் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதே இப்போது விவாதத்திற்குரிய விடயமாகவுள்ளது.

### ஒப்பந்தத்துக்கு அப்பால்...

சமஷ்டி என்ற கருதுகோள் அரசியல் விவாதத்தில் மீண்டும் பிரவேசித்துள்ளது இது ஒரு சாதகமான முன்னேற்றமாகவே உள்ளது. ஏனென்றால் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் வழங்கப்பட்டதற்கு அப்பால் அரசியல் தீர்வொன்றைக் காணக்கூடிய சூழ்நிலையை இது சுட்டிக் காட்டுகின்றது.

ஆனால் அதிகாரப் பரவலாக்கலுக்கான அலகு சிங்கள, தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளிடையே சர்ச்சைக்குரிய ஒரு விடயமாகத் தொடர்ந்தும் உள்ளது. இணைப்பா, இணைப்பில்லையா என்ற விடயத்தைப் பொறுத்த வரையில் சகல கட்சிகளும் அடிப்படையான வாதத்தை முன்வைத்துள்ளன. இந்த விடயத்தைப் பொறுத்தவரையிலும் இனத்துவ அடிப்படை வாதம், பேச்சுவார்த்தை மூலமான தீர்வொன்றுக்குத் தடையாக இருக்கலாம்.

### உடனடிக் கடமைகள்

மூன்று இனங்களினதும் அரசியல் கட்சிகளும் காலம் தாழ்த்தாமல் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய இரண்டு கடமைகள் உள்ளன முதலாவதாக அதிகாரப் பரவலாக்கல் எந்தளவுக்கு இருக்க வேண்டும் என்பது விரிவாக ஆராயப்பட்டு முடிவு காணப்பட வேண்டும். தெளிவில்லாத இந்திய மாதிரியை விவாதங்களில் இனியும் சேர்த்துக் கொள்ளக் கூடாது. இந்திய மாதிரி கூட எதிர் மறையான ஒரு உதாரணத்தையே மத்தியப்படுத்தப் [illegible]

இரண்டாவதாக அதிகாரப் பரவலாக்கலுக்கான அலகு பற்றிய முடிவு. இணைப்பு-இணைப்பு இன்மை ஆகியவற்றிடையே ஓர் இணக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்.

இந்த இரண்டு கடமைகளும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் உள்ளேயும், வெளியேயும் புதிய ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளுக்கு வழிகோலுபவையாக இருக்கும்.

பேச்சுவார்த்தை முயற்சிகளை இனத்துவ அரசியல் பேச்சுக்கள் மறைத்துவிடக்கூடாது என்ற படிப்பினையை தெரிவுக்குழுவின் முதலாவது கட்ட நடவடிக்கைகளின் மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

### இனத்துவ அணுகுமுறை

இலங்கையின் இனப்பிரச்சினையை இனத்துவ அணுகுமுறைகளின் மூலம் தீர்த்துவிட முடியாது என்பது இப்போது தெளிவாகி வருகின்றது. இனத்துவ தேசியவாதம் இனங்களிடையேயான பிரச்சினையை மேலும் அதிகரித்துக் காட்டவே உதவும்.

இதனால் இப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கு முடியாத நிலைமையே இருக்கும்.

இதேபோல் கடந்த காலங்களில் தமது சொந்த சமுகத்தை இனத்துவ அடையாளத்தின் அடிப்படையில் ஒன்று திரட்டிய அரசியல் கட்சிகள் இனத்துவப் பொறிக்குள் அகப்பட்டு விட்டன என்பதும் இப்போது தெளிவாகியுள்ளது.

அவர்கள் அரசியல் தீர்வொன்றை நோக்கிச் செயற்படும் போது இன அடிப்படையில் உருவாக்கப்பட்ட அவர்களது மனங்களை மாற்றியமைத்துக் கொள்வது சிரமமான ஒரு காரியமாக உள்ளது.

கடந்த அக்டோபர் - டிசம்பர் மாதங்களில் தெரிவுக்குழுவில் எழுந்த உணர்வுபூர்வமான விவாதங்கள் இந்தப் பொறிக்குள் அவர்கள் அகப்பட்டுள்ளதால் எழுந்துள்ள எதிர்மறையான நிலையையே எடுத்துக்காட்டியது.

### சமஷ்டி அமைப்பு

இலங்கைக்கு சமஷ்டி முறையிலான அமைப்பு முறை ஒன்றைக் கொண்டு வருவது ஜனநாயக மயமாக்கும் பாரிய திட்டத்தின் ஒரு பகுதியாகவே இருக்கும்.

இப்போது மேலதிக அதிகாரப் பரவலாக்கலுக்கு ஆதரவு வழங்குகின்ற அனைத்துக் கட்சிகளும் இலங்கையின் புதிதாக இன ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு அரசியல் தீர்வொன்று அவசியம் என்பதை உணர்கின்றனரா என்பது தெரியவில்லை.

இது ஒரு புதிய சமுதாய ஒப்பந்தமாகவும் இருக்கும். அரசாங்கம் அதன் பகுதிகளில் மட்டுமன்றி மத்தியிலும் புனரமைப்பு செய்யப்பட வேண்டும். இதற்காக ஒரு ஜனநாயகப் புனரமைப்புத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்றார்

### சமஷ்டி மிக முந்திய யோசனை

இக்கருத்தரங்கில் கலாநிதி நீலன் திருச்செல்வமும் உரையாற்றினார்.

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு சமஷ்டி முறை அவசியம் எனவும் வடக்கு-கிழக்கு இணைப்பு பேச்சுவார்த்தைக்கு அப்பாற்பட்ட ஒரு விடயம் எனவும் அப்போது அவர் வலியுறுத்தினர்.

நீலனின் உரையைத் தொடர்ந்து சபையிலிருந்த பௌத்த பிக்குமாரும், மற்றவர்களும் அவரிடம் பல கேள்விகளைத் தொடுத்தனர். சமஷ்டி தொடர்பான பிக்கு ஒருவரின் கேள்விக்கு பதில் அளித்த கலாநிதி நீலன் பின்வருமாறு கூறினார்:

''டொனமூர் அரசியல் அமைப்பு தொடர்பான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போதே சமஷ்டி தொடர்பான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. அப்போது இலங்கை, கண்டி, கீழ் நாட்டு சிங்களப் பகுதி, வடக்கு-கிழக்கு தமிழ்ப் பகுதி என்று மூன்று சமஷ்டி அமைப்புக்களாகப் பிரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

மொழிவாரி அடிப்படையில் பிரித்தால் இலங்கையில் இரண்டு மாநிலங்கள் இருக்கும். வடக்கில் 95 விகிதத்திற்கு மேலும் கிழக்கில் 70 விகிதத்திற்கு மேலும் தமிழர்களைக் கொண்டு உள்ளமையால் அது ஒரு மொழிவாரி மாநிலமாக இருக்கும்.

ஒரு நாட்டில் பல இனங்கள் பிரதேச ஒருமைப்பாட்டுடன் உள்ள போது அவற்றிடையே ஒருமைப்பாட்டை ஏற்படுத்த சமஷ்டி முறையே வழி ஏற்படுத்தும். இதன் மூலம் ஒவ்வொரு இனத்தினதும் உரிமைகள் பாதுகாக்கப்படும்.

இவ்வாறான ஏற்பாடு ஒன்று இல்லாவிட்டால் ஜனநாயக நாடுகளில் சிறுபான்மையினங்கள் மீது பெரும்பான்மை இனத்தின் ஆதிக்கம் அதிகமாக இருக்கும் என்றார்.

மற்றொரு கேள்விக்குப் பதிலளித்த கலாநிதி நீலன், காலஞ்சென்ற ஜெனரல் கொப்பேகடுவ கூட இராணுவத் தீர்வொன்றை விரும்பியிருப்பார் என நாம் நம்பவில்லை எனக் கூறினார்.

''ராவய'' பத்திரிகையின் ஆசிரியர் திரு. விக்டர் ஐவன், கலாநிதி சோமரத்தின அபேசேகர ஆகியோரும் இங்கு உரையாற்றினார்கள்.

(அ-இ)

## அரிசி, மா விநியோகம்

யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 'அ' 'உ' அட்டைகளுக்கு அரிசி, மா ஆகியவற்றை வழங்கி வருகிறது.

ஐந்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 8 கிலோ அரிசி, 2 கிலோ மா ஆகியவையும்—

ஐந்துக்குக் குறைந்த உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு ஐந்து கிலோ அரிசி, 2 கிலோ மா ஆகியவையும் வழங்கப்பட்டு வருகின்றன.

இது தவிர, 10, 11 ஆம் இலக்க உணவு முத்திரைகளுக்கு மா. அரிசி ஆகியவையும் வழங்கப்படுகின்றன.

## தமிழ்,முஸ்லிம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படைப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் உயர் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''த ஐலண்ட்'' செய்தி வெளியிட்டிருக்கிறது

பாதுகாப்பு அதிகாரிகள் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம் எச். எம். அஷ்ரப்புக்கு வழங்கி வந்த பாதுகாப்பை மேலும் தீவிரப் படுத்தி உள்ள[illegible] தெரிவிக்கப்படுகிறது.

[உ-ள]

ஐ நா. தூதரக முறைப்பாட்டை அடுத்து

# செட்டிக்குளம் அகதி முகாம் வேறிடத்துக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தின் முறையீட்டைத் தொடர்ந்து செட்டிகுளத்தில் அரசாங்கம் அமைத்திருந்த அகதி முகாம் ஒன்று பாதுகாப்பான இடத்துக்கு மாற்றப்பட்டது.

ஆயுதப் படையினரின் முன்னணி பாதுகாப்பு அரணில் இருந்து 100 மீற்றர் தொலைவில் இந்த அகதி முகாம் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாகவும் —

மோதல் ஏற்படுமிடத்து அகதிகள் இடையில் மாட்டிக் கொள்ளும் ஆபத்து உண்டு என்றும் ஐ. நா. அகதிகள் தூதரகம் அரசுக்கு எடுத்துக் கூறியது.

இதற்கு அரசு செவிசாய்க்காது இருந்து வந்தது இந்த நிலையில் மோதல் ஒன்றின் போது 80 துப்பாக்கிச் சூடுகள் அகதி முகாமைத் தாக்கின அதனைத் தொடர்ந்து அகதி முகாமை உடனடியாக பாதுகாப்பான இடத்துக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை ஐ. நா. அகதிகள் தூதரகம் வலியுறுத்தியது.

கடந்த வாரம் அவ்வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அகதி முகாம் மாற்றப்பட்டதாக ஐ நா அகதிகள் தூதரக பதில் வதிவிடப் பிரதிநிதி டாக்டர் நிக்கலஸ் தெரிவித்தார்.

''மக்களின் பாதுகாப்புக் குறித்தே நாம் அதிகமாகக் கவலை கொண்டுள்ளோம்''— இவ்வாறு அவர் மேலும் சொன்னார்.

(ஒ-எ)

# தாயகம் திரும்பிய அகதி இன்னும் மகஸின் சிறையில்!

## ஐ நா. தூதரக பிரதிநிதி கவலை

யாழ்ப்பாணம், மார்ச் 10

கடந்த ஆண்டு இந்தியாவில் இருந்து மன்னாருக்குத் திரும்பிய தமிழ் அகதிகளில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் இன்னும் கொழும்பு மகஸின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள ஐ. நா. அகதிகள் தூதரக பதில் வதிவிடப் பிரதிநிதி டாக்டர் பீற்றர் நிக்கலஸ் இத்தகவலைத் தெரிவித்தார்.

மன்னாரில் வந்திறங்கிய தமிழ் அகதிகளில் 16 பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர் என்றும்—

ஐ நா. தூதரகத்தின் தலையீட்டைத் தொடர்ந்து இரண்டு வாரங்களுக்கு இடையில் அவர்களில் 15 பேர் விடுதலை செய்யப்பட்டனர் என்றும்— அவர் கூறினார்

கொழும்பு மகஸின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதியை விடுவிப்பது தொடர்பாக தமது தூதரகம் தொடர்ந்து முயற்சித்து வருவதாகவும்—

இது தொடர்பாக நீதிமன்ற நடைமுறையை மேற்கொள்வதாக படையினர் உறுதியளித்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

நாடு திரும்பிய அகதிகளில் ஒருவர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு இருப்பது குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்த திரு நிக்கலஸ் தாயகம் திரும்பிய அகதிகள் முன்னர் செய்த குற்றங்கள் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படக் கூடாது என்று தெரிவித்தார்.

புதிய வாழ்வு தொடங்குவதற்காக அகதிகள் திரும்பி வருகின்றார்கள் என்பதையே கவனத்திற் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## உலர் உணவு விநியோகம்

கடந்த 8ஆம் திகதி முதல் தெல்லிப்பழை பல நோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலம் வழங்கப்பட்டு வரும் இடம்பெயர்ந்தவர்களுக்கான 116, 117ஆம் கட்ட நிவாரண உலர் உணவு விநியோகம் எதிர்வரும் 15ஆம் திகதிவரை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-162)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்குப்பிட்டி ஊடாக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யூடாக உணவு வாகனங்களை அனுமதிக்கும் யோசனையை புலிகள் முன்வைத்தனர்.

பூநகரிப் பாதை ஊடாக பொதுமக்களை அனுமதிப் து சம்பந்தமாக தொடர்ந்து அடுத்த கட்டமாக பேச்சுக்கள் இடம்பெறவுள்ளன.

இ நா. அகதிகள் ஆதரக அதிகாரி டாக்டர் நிக்கலஸ் நேற்றுக்காலை பேச்சுக்களை முடித்துக்கொண்டு பிற்பகலின் கப்பல் மூலம் கொழும்பு பயணமானார்

அவர் அரசுடன் பேச்சுக்களை நடத்திவிட்டு, மீண்டும் யாழ்ப்பாணம் வரும்பொழுது அடுத்த கட்டப் பேச்சுக்கள் தொடரும் — என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

---

### பாஸ்போர்ட் — அடையாள அட்டை
## தவறிவிட்டன

பேரின்பசிவம் தயாளன் என்பவரின் பாஸ்போர்ட், அடையாள அட்டை ஆகியன தவறிவிட்டன

கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

பே. தயாளன்
''தாமரை அகம்''
சிவன்கோவிலடி,
வட்டு மேற்கு.
வட்டுக்கோட்டை. (2+800)

---

### ஸ்தாபகர் கென்றிடுனான்ற்
## ஞாபகார்த்த விழா

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் இளையின் அனுசரணையுடன் வலி வடக்கு பிரிவு நடத்தும் இவ் விழா எதிர்வரும் 2-, 25-04-93 ல் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் இந்நிகழ்வில் வதிவிட பாசறைத்தீ, விளையாட்டுப் போட்டிகள் (வலைப்பந்து, கரப்பந்து, உதைபந்து) அணிநடை, கண்காட்சி, முதலுதவி செய்முறைப் போட்டி, அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்தல், தொண்டர் சேவை, புனரமைத்தல்— செயலமர்வு ஆகியவை நடைபெறும்.

தெரிவுப் போட்டிகள் 03-04-93லிருந்து சகல செஞ்சிலுவைச் சங்க பிரிவுகளுக்கும் இடையில் நடைபெறும். இப்போட்டிகளுக்கு சகல பிரிவுகளினதும் பூரண ஒத்துழைப்பினை வேண்டுகின்றோம்.

–வலி. வடக்கு செஞ்சிலுவைச் சங்க பிரிவினர்

(6044)

---

## மரண அறிவித்தல்கள்

### மூத்தையா நடராசா

காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொழும்பில் வசித்தவருமான மூத்தையா நடராசா 7-3-93இல் காலமானார். அன்னார் இராசலட்சுமியின் அன்புக் கணவரும், கிரிதரன், சிறிதரன், ஜெயதரன், யசோதா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமச்சடங்கு 9-3-93 செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

No 7, Inner Fairline Road,
Dehiwela,
Colombo.

தகவல் :
கு. திருவரன்
(பெறாமகன்)
(34805)

### சூசைப்பிள்ளை பிரான்சிஸ்
(மரியநாயகம்)

ஓய்வுபெற்ற யாழ். சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய அதிபரும், குருநகர் எரிபொருள் விற்பனை உரிமையாளருமாகிய சூசைப்பிள்ளை பிரான்சிஸ் (மரியநாயகம்) காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற மாகிறேட் அவர்களதும் மேரி இமெல்டா அவர்களதும் அன்புக் கணவரும், பீட் எமில் செல்வா (ஜேர்மனி), அலெக்ஸ் கமிலஸ் யோகா (கனடா), ஜோர்ஜியா அமலேஸ்வரி (சிங்கப்பூர்), வேஜினியா ராஜினி(அவுஸ்திரேலியா), றொசாறியோ மாலினி (அவுஸ்திரேலியா), மீரியம் உதயனி (திருக்குடும்ப கன்னியர்மடம்) ஆகியோரின் தந்தையும், சறோ, கலா ஆகியோரின் வளர்ப்புத் தந்தையும், ஜான்சி (ஜேர்மனி), உமா, கிறேசியன் (டுபாய்), பிலிப்நேரி (அவுஸ்திரேலியா), மனோஜ் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும், வேதநாயகம், பவளம், றெஜினா அன்ரனிப்பிள்ளை (திருக்குடும்ப கன்னியர் மடம்), திருமதி அ கி. வின்சன் (சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை), காலஞ்சென்றவர்களாகிய மத்தினா, மத்தியாஸ், மொனிக்கம்மா, அருமைநாயகம் ஆகியோரின் சகோதரரும், ரூபன், நிலானி, தர்சிக்கா, தர்ஷினி ஆகியோரின் பேரனாருமாவர்

அன்னாரின் பூதவுடல் நாளை (11-03 93) ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3-00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து யாழ் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்

129 1 பீச் றோட்,
யாழ்ப்பாணம்.
(24807)

தகவல்:
மேரி இமெல்டாவும்
(மனைவி)
குடும்பத்தினரும்

---

## வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

நேற்று முன்தினம் மன்னார் பகுதியில் ராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதல் ஒன்றில் வீரவேங்கை வாணன் (பொன்னுச்சாமி ஈஸ்வரன் — கிண்ணியா) என்ற போராளி வீரமரணமடைந்தார். (உ-த)

## ஷெல் தாக்கு!

யாழ்ப்பாணம், மார்ச் 10

நேற்று முற்பகல் 10 மணியளவில் பலாலி ராணுவ முகாமிலிருந்து பரவலாக ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

திருவடிநிலைப் பகுதியிலும் மாகியப்பிட்டி, குப்பிளான் பகுதிகளிலும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன (க)

## வயோதிப மாது ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், மார்ச் 10

ஆனைக்கோட்டை கலை ஒளி சனசமூக நிலையத்துக்கு சமீபமாக வீதியில் மயங்கி விழுந்த வயோதிப் பெண் ஒருவர் சுயநினைவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றிரவு அனுமதிக்கப்பட்டுள்ளார். [உ-15]

## ஐந்து படகுகள் அழிக்கப்பட்டன

கொழும்பு' மார்ச் 10

யாழ் கடலேரியில் கடந்த ஞாயிறன்று ஐந்து படகுகளை கடற்படையினர் அழித்ததாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் கொழும்பில் தெரிவித்தார். (உ-6)

## ஷெல் தாக்குதல் ஹெலி நோட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

பூநகரி பழைய இறங்குதுறை இராணுவ முகாமில் இருந்து கிளாலிக் கரையோரப் பகுதிகளை நோக்கி நேற்றுக் காலை 7 மணிக்கு அகோர ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

இச் சம்பவத்தைத் தொடர்ந்து காலை 8 மணியளவில் பளைஷூர், அரியாலை, கிளாலிக் கரையோரப் பகுதிகளை உள்ளடக்கி ஹெலிகொப்டர் ஒன்றும் வட்டமிட்டு ரோந்து பார்த்துச் சென்றது.

காலை முதல் மாலை வரை குடாநாட்டுப் பகுதியில் விமான ஓட்டமும் அதிகரித்துக் காணப்பட்டது. (உ 15-17)

---

### சிறிமா...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சித்து உரையாற்றினர்.

அரச சார்பான — சேவா வனிதா இயக்கத்தின் — மகளிர் தினக் கூட்டம் அதன் தலைவி திருமதி ஹேமா பிரேமதாஸா தலைமையில் பதுளை வின்செண்ட் டயஸ் விளையாட்டரங்கில் நடைபெற்றது. (உ-6)

---

### அ. தி. மு. க...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரவை அ. தி. மு. க. விலக்கியிருப்பதால், நரசிம்மராவ் அரசு நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்றும் கருதப்படுகிறது.

தற்போது வரவு—செலவுத் திட்டத்தை சபையில் சமர்ப்பித்திருக்கும் நரசிம்மராவ் அரசு, அதனை நிறைவேற்றுவதற்கு — அ தி. மு. கவின் ஆதரவு இல்லாததால் — கஷ்டத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

---

### புலமைப் பரிசில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வுகளும் வெளியாகமாட்டா என்றும்—

புதிய பாடசாலைகளில் அனுமதி பெறத்தக்க வகையில் குறிப்பிட்ட எண்ணிக்கையான மாணவர்களின் முடிவுகள் மட்டும் வெளியிடப்படும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பரீட்சைக்கான வெட்டுப்புள்ளி இதுவரை கிடைக்காததால் உதவி பெறும் மாணவர் எண்ணிக்கை, சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை என்பவற்றை வெளியிட முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

---

# தெரிவுக்குழு அறிக்கையுடன் அங்கிலிக்கன் ஆயர் வருவார்?

யாழ்ப்பாணம், மார்ச் 10

இனப் பிரச்சினைக்கு தீர்வு காண நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின இறுதி அறிக்கை தயாரானதும் அது குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த அங்கிலிக்கன் ஆயர் வண. கெனத் பெர்னாண்டோ மீண்டும் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.

தெரிவுக் குழு அறிக்கை வெளியானவுடன், அந்த அறிக்கை பற்றி விடுதலைப் புலிகளின் கருத்தை அறிந்து அரசுக்கு தெரிவிப்பதற்காக தாம் யாழ்ப்பாணம் வரவிருப்பதாக யாழ்ப்பாணத்தை சேர்ந்த மதகுரு ஒருவரிடம் ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவித்திருப்பதாக அறியவருகிறது.

தம்முடன் தென்பகுதி புத்திஜீவிகளையும், மதகுருமார்களையும் அழைத்து வர அவர் ஏற்பாடுகள் செய்வதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது இடைக்கால அறிக்கையின் நகலை ஆராய்வதற்காக நாளை வியாழக்கிழமை கூடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

★ கொழும்பு மாநகரில்

# சண்டைக் கோஷ்டிகளிடம் பெருமளவு நவீன ஆயுதங்கள்

கொழும்பு, மார்ச் 10

கொழும்பு மாநகரில் கோஷ்டி சண்டைகளில் ஈடுபட்டுள்ள விரும்பத்தகாத குழுக்களிடம் நவீன ஆயுதங்கள் பெரும் எண்ணிக்கையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயுத படைகளில் இருந்து தப்பி ஓடியவர்களே தங்களிடமிருந்த ரைபிள்கள், கிறனேட்கள், பிஸ்டல்கள் மற்றும் பல ரக ஆயுதங்கள் முதலியவற்றை இரகசியக் கோஷ்டிகளுக்கு வழங்கி உள்ளனர் என்று இராணுவ மற்றும் பொலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

போதைவஸ்து வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கோஷ்டிகளே நவீன ஆயுதங்களைப் பாவிக்க தொடங்கியுள்ளன என்றும் —

மாளிகாவத்தையில் கடந்த முதலாம் திகதி நான்கு பேரைச் சுட்டுக் கொல்ல 9 மி.மி. பிஸ்டலும் ரிவோல்வரும் பயன்படுத்தப்பட்டன என்றும் அந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

இதேவேளை —

ஒப்பந்த அடிப்படையில் கொலை செய்யும் குழுக்களின் எண்ணிக்கை கொழும்பில் அதிகரித்து வருவதாகவும் ''த ஐலண்ட்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் உதவி

## 75 ஆயிரம் தொன் கோதுமை அரசுக்கு கடன் அடிப்படையில்

கொழும்பு, மார்ச் 10

பி. எல். 480 உதவித் திட்டத்தின் குறைந்த வட்டியில் நீண்டகால கடன் அடிப்படையில் ஒரு கோடி டொலர் பெறுமதியான கோதுமையை இலங்கைக்கு வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

இது சம்பந்தமான உடன்படிக்கையில் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதர் திருமதி திறெசித்ரா ஷாபரும் நிதி அமைச்சுச் செயலாளர் திரு ஆர். பாஸ்கரலிங்கமும் நேற்று கையெழுத்திட்டனர்.

இந்த உடன்படிக்கையின் கீழ், 1993 ஆம் ஆண்டில் 75 ஆயிரம் மெட்ரிக் தொன் கோதுமையை இலங்கை கொள்வனவு செய்யும்.

1956 ஆம் ஆண்டில் பி. எல். உதவித் திட்டம் அமுலுக்கு வந்ததில் இருந்து இலங்கை இத்திட்டத்தின் கீழ் இதுவரை 76 கோடி ரூபா பெறுமதியான கோதுமையை அமெரிக்காவிடம் இருந்து வாங்கியுள்ளது. (உ-எ)

## ஜெயலலிதாவை பதவி விலக்கக் கோரி 3 ஆவதுமனு

### சுப்பிரமணிய சுவாமி சமர்ப்பித்தார்

சென்னை, மார்ச் 10

முதலமைச்சர் ஜெயலலிதாவை அரசியல் சாசனத்தின் 191ஆவது பிரிவின்படி பதவி விலக்க வேண்டும் என்று கோரும் மூன்றாவது மனுவை ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி மாநில ஆளுநர் பீஷ்ம நாராயண சிங்கிடம் சமர்ப்பித்திருக்கிறார்.

செல்வி ஜெயலலிதா உரிமையாளராக உள்ள ஒரு பத்திரிகைக்கு மாநில அரசு விளம்பரம் கொடுத்து வருவதாகவும்—

மாநில அரசுக்கும் அந்தப் பத்திரிகைக்கும் ஒப்பந்தம் இருப்பதாகவும் டாக்டர் சுவாமி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இதேவேளை—

செல்வி ஜெயலலிதாவை பதவி விலக்கக் கோரும் தமது மனுவை தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கும்படி மாநில ஆளுநருக்கு உத்தரவிடும்படி கோரும் மனுவொன்றை டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறார். (த-எ)

## முல்லைத்தீவு, மணலாறில் மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 10

முல்லைத்தீவு - மணலாறு மாவட்டத்தில் மகளிர் தின விழா எழுச்சி ஊர்வலம் மற்றும் பொதுக் கூட்டம் ஆகியவற்றுடன் உணர்வு பூர்வமாக கொண்டாடப்பட்டது.

மகளிர் தினமான —நேற்று முன்தினம் காலையில் புதுக்குடியிருப்பு, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், மணலாறு ஆகிய பகுதியில் இருந்து வந்த 15 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள முள்ளியவளை காட்டு விநாயகர் கோவில் முன்னர் கூடினர்.

மாணவர் பாண்ட் இசை முழங்க, மகளிர் படைப் பிரிவினர் அணிவகுத்துச்செல்ல, மகளிரும், மாணவர்களும், மக்களும் பதாகைகளைத் தாங்கியவண்ணம், கோஷம் எழுப்பியவாறு ஊர்வலமாகச் சென்றனர்.

முள்ளியவளை வித்தியானந்த கல்லூரியை ஊர்வலம் அடைந்ததும், அங்கு மாபெரும் கூட்டம் நடந்தது. (உ-3)

கொழும்பு பல்கலையில்

## சுதேச மருத்துவ பீடத்தின் மாணவர் சத்தியாக்கிரகம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவபீட மாணவர்கள் காலவரையற்ற சத்தியாக்கிரக இயக்கம் ஒன்றில் குதித்துள்ளனர்.

சுதேச வைத்திய மாணவர்களின் பாடவிதானத்திலிருந்து மேற்கத்தைய மருத்துவ அங்கத்தை நீக்கி, விரிவுரைகளை நிறுத்தியதை ஆட்சேபித்தே இந்தச் சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுதேச வைத்திய மாணவர்கள் தமது சத்தியாக்கிரக இயக்கத்தை நேற்று அதிகாலையே ஆரம்பித்துவிட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் பேரவையின் ஆதரவுடன் நடைபெறும் இந்தச் சத்தியாக்கிரக இயக்கம், நிறுத்தப்பட்ட மேலைத்தேச மருத்துவ விரிவுரைகள் மீளத் தொடங்கப்படும் வரை தொடரும் என்று தேசிய மருத்துவக் கல்லூரி மாணவர் அவையின் தலைவர் திரு. சி அல்விஸ் தெரிவித்தார்.

மேலைத்தேச மருத்துவ விரிவுரைகள் நிறுத்தப்பட்டதால் பல மாணவர்கள் தங்கள் போதனையைப் பூரணப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

தேசிய மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பட்டம் பெற்ற பின்னர் மேற்கத்தைய மருத்துவர்கள் போலச் சிகிச்சைகளைச் செய்கிறார்கள் என்று ஆட்சேபித்தே மேலைத்தேச மருத்துவ விரிவுரையாளர்கள் தாம் நடத்தும் போதனையை நிறுத்தினர் என்று கூறப்படுகிறது. (அ-6)

## விமானப்படையில் 14 ஆயிரம் படையினர்!

கொழும்பு, மார்ச் 10

ஆயிரத்து 400 பேருடன் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீலங்கா விமானப்படையில் தற்பொழுது 14 ஆயிரம் படையினர் உள்ளனர். பெண்களும் இப்போது பணிபுரிகின்றனர்.

ஒரு என்ஜின் கொண்ட விமானத்துடன் ஸ்ரீலங்கா விமானப்படை ஆரம்பிக்கப்பட்டது. தற்போது சுப்பர் சொனிக், ஜெட் போர் விமானம் உட்பட பல்வேறு விமானங்கள் விமானப்படையிடம் உள்ளன.

விமானப்படையின் 42 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் பிரதமர் இத்தகவலைத் தெரிவித்தார். (ஓ-எ)

## புதிய தூதரை ஈ.பி.ஆர்.எல்.எவ். சந்தித்தது

கொழும்பு, மார்ச் 10

ஈ. பி. ஆர். எல். எவ். குழு ஒன்று அதன் செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட எம். பி. யுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் கடந்த வெள்ளியன்று புதிய இந்தியத் தூதர் திரு. நரேஸ்வர் தயாளை சந்தித்துப் பேச்சு நடத்தியதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (உ-5)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 10-03-1993இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org